14.03.2025

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்)

விழுப்புரம்.

OS.19/2024

வா.சா.**1**

**<u>பெயர்-</u>** திருமதி. சுமையாபானு

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

**நான் வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் கணவருடைய சொத்து எனக்கும், என் குழந்தைகளுக்கும் முகமதிய சட்டத்தின் படி பாகம் வேண்டும் என்று கேட்டு போட்டுள்ளேன். எனக்கு சொந்த ஊர் செண்டிம்பாக்கம் கிராமம் ஆகும். எனது அப்பா இறந்துவிட்டார். அம்மா மட்டும் உயிருடன் உள்ளார். என் உடன் பிறந்தவர்கள் என்னுடன் சேர்ந்து இரண்டு பெண் பிள்ளைகள் மற்றும் இரண்டு ஆண் பிள்ளைகள் ஆவார்கள். என்னுடன் சேர்த்து அனைவருக்கும் திருமணம் ஆகிவிட்டது. இந்த வழக்கில் எனக்கும், நசீர் அகமது என்பவருக்கும் திருமண ஒப்பந்தம் சீர்காழியில் சேந்தங்குடி ஜமாத்தில் திருமணம் நடைபெற்றது. இந்த ஒப்பந்தத்தில் யார் யார் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்றால் எனது அப்பா மற்றும் எனது தாத்தா மற்றும் என் பெரியப்பா, என் தம்பி ஆகியோர் சாட்சி கையெழுத்து போட்டார்கள். என் மாமா கையெழுத்து போட்டார். அவர் தற்போது உயிருடன்இல்லை. என் தாத்தா, என் அப்பா, உயிருடன் இல்லை. நசீர் அகமதிற்கு சொந்த ஊர் விழுப்புரம் என்றால் இல்லை. என் கணவருடைய சொந்த ஊர்**

திண்டுக்கல் ஆத்தூர் ஆகும். என் சகோதரி என் மைத்துனருடன் தான் இருக்கிறார்.

இந்த திருமண சம்பவம் என் கணவரின் குடும்பத்திற்குள் யாருக்கும் தெரியாது.

**குறுக்கு விசாரணை பகுதியாக நிறுத்திவைக்கப்பட்டு ஒத்திவைக்கப்படுகிறது.**